**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**CC.No.352 of 2025**

PW-2

| Name | பழனியம்மாள்(PW2) | Calling | சிறப்பு உதவி ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's Name | மாரியப்பன் | | |
| Village | அவிநாசி காவல் நிலையம் | | |
| Taluk | அவிநாசி | Age | **51** |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day **of July 2026** by K.Kulanthiavel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது அவிநாசி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இவ்வழக்கில் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 04.04.2025 ஆம் தேதி தலைமைக் காவலர் ஜெயக்கிருஷ்ணன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது திருப்பூர் அரசு மருத்துவமனையில் இருந்து பெற்ற தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அருள் மோனிஷ் என்பவரது புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் திரும்பி நிலைய குற்ற எண்.268/2025 சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) of BNS ன்-கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் சேகர் புலன் விசாரணைக்காக வைத்தார். **புகார் அ.சா.ஆ.2 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**

உதவி ஆய்வாளர் சேகர் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 04.04.2025 ம் தேதி காலை 06.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் லலித்குமார், மயில் வாகனம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

சம்பவ இடத்தில் இருந்து 06.30 மணிக்கு பைக் சாவி ஒன்றை அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். அந்த படிவம் 91 அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பைக் சாவி ஒன்று (அ.சா.பொ.1) ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் தயார் செய்துள்ளார். எதிரி அன்றைய தினமே கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். 01.05.2025 ம் தேதி அவிநாசி அரசு மருத்துவமனை மருத்துவர் ரம்யா என்பவரை விசாரித்து வாதிக்கான காயச்சான்றுபெற்று வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார். பின், இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) of BNS ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.அந்த **காயச்சான்று (அ.சா.ஆ.8) ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னது போல சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் புகார்தாரர் கொடுத்த தவறான புகாரின் அடிப்படையில் சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல, எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை.**

| | |
|---|---|
| | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |